www.tamilarangam.net

University Student's Union
University of Jaffna
பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Patron :
PROF.N. SHANMUGALINGAN
Vice-Chancellor.

Phone : 021-222-3744
E-Mail : Jaffnausu@yahoo.com

Senior Treasurer :
MR. K. SIVARAJAH
Lecturer,
Dept. of Commerce.

Date : 23/04/2009

## தமிழ்மக்கள்மீது சர்வதேசம் பாராமுகம் காட்டுகிறது

தமிழ்மக்கள்மீது சர்வதேச சமூகம் பாராமுகம் காட்டிக்கொண்டிருப்பது பெரும் கவலையளிக்கிறது. அண்மையில் 1500க்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ்மக்கள் போர் வலயத்துக்குள் பலியாகியுள்ளனர். இலங்கை அரசாங்கத்தால் இப்படியொரு துணிச்சல்தனமான மக்கள்மீதான போரை முன்னெடுப்பதற்கு சர்வதேச சமூகம் கொண்டிருக்கிற மௌனம் பெரும் உந்துதலாக இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் எனறு கூறிக்கொண்டு இவ்வளவு கொடுரமாக தமிழ் மக்கள் கொல்லப்படுகிறபோது சருவதேசம் மௌனம் கொண்டு அதற்கு ஆதரவளிப்பது எம்மிடையில் பெரும் அதிர்சசியை ஏற்படுத்தியுள்ளது.

வன்னியில் மக்கள்மீது நடத்தப்படுகிற தாக்குதல்களினால் எமது மாணவர்கள் தினமும் தங்கள் உறவுகளைப் பறிகொடுத்தும் அவர்கள் பற்றிய செய்திகள் தெரியமாலும் துடித்துக்கொண்டுள்ளனர். வன்முறைகளாலும் மனிதாபிமானமற்ற வகையிலும் நிகழ்த்தப்படுகிற இந்தப்போர் எமது இனத்தையே பெரும் துயரத்துக்குள்ளாக்கிக்கொண்டிருக்கிறது. வாழ்நாள் முழுவதற்கும் வரலாற்றிலும் மாறாத வடுக்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. எமது மக்கள்மீது எல்லா வகையிலும் முழு அளவில் அடக்குமுறை ஏற்படுத்தப்பட சருவதேச சமூகம் எவ்வித மனிதாபிமானமுமற்று பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் கொடுமையான விளைவை ஏற்படுத்துகிறது.

யுத்த முனைகளின் நிலமை மனிதாபிமானமற்ற வகையிலும் போர் விதிகளுக்கு மாறுபட்டும் கொடும் நிலவெறிக்கான அடிப்படைகளிலும் காணப்படுகிறது. தமிழர்களின் போராட்டத்தை தோற்கடிப்பது அல்லது அழிப்பது என்பது இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது. அதனால் மேலும் பிரச்சினைகள் உருவாகும். தமிழ்மக்களின் அபிலாசைகளை தமிழர்கள் அகிம்சை வழியில் கேட்டு ஆயுத வழியிலும் கேட்டு பேராடி வருகிறார்கள். போர் நிறுத்தத்தையும் நிபந்தனையற்ற பேச்சுவாத்தையையும் தமிழீழ விடுதலைப்புலிகள் கோரி அமைதி வழியை நாடுகிறபோதும் அரசாங்கம் யுத்த தீர்வில்தான் பிடியாக நிற்கிறது. சுய உரிமையுடைய பாதுகாப்பான தமிழ் மக்களுக்கு ஏற்ற வாழ்வை தமிழர்களால்தான் ஏற்படுத்த முடியும் என்பதை யாழ் பல்கலைக்கழக சமூகம் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறது.

தமிழ்தேசியம், சுயநிர்ணய உரிமை, மரபுவழித்தாயகம் என்பவற்றை அங்கிகரிக்கும்படி நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்க இலங்கை அரசாங்கம் முன்வராது தமிழ்மக்களின் அரசியல் முனைப்புக்களை சிதைப்பதற்காக இன்று பெரும் அழிவுப் போரை நடத்துகிறது. இதனால் மனிதாபிமானமற்ற வகையில் எமது மக்கள் கொன்றழிக்கபடுகிறார்கள். எமது மக்கள் யுத்த முனைகளில் ஆயுதங்களால் நடத்தப்படுகிற கொடுமையும் உயிர் தஞ்சம் தேடி போகுமிடம் தெரியாமல் அலைவதும் தொடர்ந்த வண்ணமுள்ளது. குழந்தைகள், இளைஞர்கள, பெண்கள் என்று ஒட்டுமொத்த மக்களும் பல்வேறு வழிகளில் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

www.tamilarangam.net

போரினால் தமிழர்தேசத்தின் அபிலாசைகளை அழித்துவிட இலங்கை அரசாங்கம் கங்கனம் கட்டியபடியிருக்கிறது என்பதை உலகம் நன்கு புரிந்து வைத்திருந்தபோதும் பாராமுகம் காட்டுவது மிகவும் கவலையளிக்கிறது. அரசு தனது இராணுவ வெற்றிகளையும் நிலவெறியன் மகிழ்ச்சியையும் தமிழ் மக்கள்மீது செலுத்தி பெரும் துக்கத்துக்குள்ளாக்கிறது. சுயநலனுடைய தமிழ் அரசியல் வாதிகள் தமது நலனுக்காக தமிழினவழிப்பிற்கு துணைபோகிறார்கள். மனிதாபிமானமற்று மக்கள்மீது எந்த அக்கறையுமற்று செயல்படுகின்றனர். வல்லமையுள்ள நாடுகள் பொருளாதார அரசியல் நலன்களுக்காக இலங்கை அரசாங்காத்தையும் போரையும் வலுப்படுத்தி வருகிறது.

போரை நிறுத்தி தமிழ் மக்கள்மீது கவனம் செலுத்தும்படி மீண்டும் சர்வதேச சமுகத்திடம் நாம் மிகவும் அவசியமாக வேண்டுகிறோம். அழிந்துகொண்டும் அகதி முகாம்களில் வாடியபடியும் இருக்கிற எமது மக்களை காப்பாற்றி நிரந்தரமான அமைதிக்கும் இயல்பான வாழ்வுக்கும் வழி செய்து தரும்படி கேட்கிறோம். எங்கள்மீது உலகம் கருணை செலுத்த வேண்டும். மனங்களால் அழிந்தபடியிருக்கின்ற எங்களை, நம்பிக்கை தரக்ககூடிய வாழ்வொன்றை ஏற்படுத்த உடனடியாக முன்வரவேண்டும். இழக்க முடியாத எல்லாவற்றையும் இழந்து எல்லா வகையிலும் அகதியாக நிற்கிறோம். இலங்கை அரசாங்கத்தின் சிங்கள இனவாத போக்கை கண்டித்து போரை நிறுத்த உடனடியாக முன்வர வேண்டும்.

தமிழ்மக்களுக்கான அங்கிரிப்பட்ட தேசத்தில் அவர்களால் நிர்ணயிக்கின்ற ஆட்சியில்தான் தமிழ்மக்களால் நிம்மதியாகவும் சுகந்திரமாகவும் வாழமுடியும். சிங்கள ஆட்சியாளர்களால் அரைநூற்றாண்டு காலமாக தமிழ் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். தற்போதைய அரசாங்கம் அதன் உச்ச கட்டத்தில் நின்று தமிழ் மக்களை பெரும் துயரத்துக்குள்ளாக்கியபடியிருக்கிறார். பயங்கரவாதம் என்று தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தை நசுக்கிக் கொண்டிருப்பது தமிழ் மக்களின் மூச்சை அடக்குவதுபோன்ற செயல்பாடாகும். விடுதலைப்பேராட்டம் வாழ்வுக்காவே தொடங்கப்பட்டது.

தமிழ்மக்களின் வரலாறுகளையும் இன அடையாளங்களையும் இந்தப்போரின் வழியாக நன்கு திட்மிட்டு அழித்துக்கொண்டிருப்பதை நீங்கள் காணாமலிருப்பது பெரும் அதிர்ச்சியை எமக்கு தருகிறது. இந்த உலகத்தில் வாழ்கின்ற பூர்வீக இனம் என்ற வகையில் சிங்கள அரசுகளின் கொடிய ஆட்சிகளால்தான் தமிழர் தேசம் பற்றிய கனவு தமிழ் மக்களுக்கு அவசியமானது. தயவு செய்து பெரும் அழிவில் சிக்குண்டு அடையாளங்களை இழந்து வருகின்ற ஈழத்தமிழ் மக்கள்மீது கவனம் செலுத்தி உங்கள் வல்லமைகளால் தமிழ் மக்கள் வாழ்வதற்கான வழியொன்றை ஏற்படுத்தி அழிவிலிருந்து மீட்பதற்கு இனியாவது முன்வாருங்கள் என்று மிகவும் அவசியாக வேண்டி நிற்கிறோம்.

**நன்றி.**

**இவ்வண்ணம்,**

**23.04.2009.,காலை10.00**

STUDENT'S UNION
UNIVERSITY OF JAFFNA